# 11 விடுகதை விளையாட்டு



அகிலன் தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன். ஒரு நாள் இரவு வேளை அவனது கிராமத்தில் திடீரென மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. அதனால் அகிலன், அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணா, தங்கை ஆகியோர் வீட்டு முற்றத்தில் வந்து அமர்ந்தார்கள். அவ்வேளை...

**தங்கை** : வாருங்கள், அண்ணா விளையாடுவோம்.

**அம்மா** : இருள் சூழ்ந்த இந்த வேளையில், என்ன விளையாடப் போகிறீர்கள்?

**அகிலன்** : அது தானே அம்மா! இரவு வேளை என்ன விளையாட முடியும்?

**தாத்தா** : விளையாட முடியும். அகிலன் நான் சொல்வதைக் கேள். அனைவரும் வட்டமாக அமருங்கள். நான் விடுகதை கேட்கிறேன்.

**அகிலன்** : சரி தாத்தா, இது நல்ல விளையாட்டு.

**தாத்தா** : அடி காட்டில்; நடு மாட்டில்; நுனி வீட்டில். அது என்ன?

**அகிலன்** : ம்ம்ம்...... ‘நெல்’ தானே தாத்தா.

**தாத்தா** : சரியாக சொன்னாய் அகிலா.

**அப்பா** : நான் ஒரு விடுகதை கேட்கிறேன். பதில் கூறுங்கள் பார்க்கலாம். ஆனை விரும்பும்; சேனை விரும்பும்; அடித்தால் வலிக்கும்; கடித்தால் இனிக்கும். அது என்ன?

**தங்கை** : கடினமாக இருக்கிறதே அப்பா.

**அகிலன்** : நான் சொல்கிறேன். அதற்கு சரியான விடை ‘கரும்பு’

**அப்பா** : ஆமாம்! ஆமாம்!

(தாத்தா சிரித்தபடி விடுகதை கேட்கத் தொடங்கினார்.)

**தாத்தா** : இணைபிரிய மாட்டார்கள்; நண்பர்களல்லர், ஒன்றுசேர மாட்டார்கள்; பகைவர்களல்லர், அவர்கள் யார்?

**தங்கை** : எனக்கு தெரியும்..... ‘தண்டவாளம்’.

**தாத்தா** : கெட்டிக்காரி!

**அம்மா** : ஈட்டிப்படை வென்று; காட்டுப்புதர் கடந்து; இனிமையான புதையலைக் கண்டெடுக்கலாம். அது என்ன?

**அண்ணா** : நான் சொல்கிறேன். அம்மா! ‘பலாப்பழம்’

**அம்மா** : ஆமாம்! ஆமாம்!

**தாத்தா** : அது சரி! நாங்கள் விடுகதை கேட்டதைப் போன்று நீங்களும் விடுகதை கேளுங்கள்.

**அகிலன்** : நான் முதலில் கேட்கிறேன்.
உடல் சிவப்பு; வாய் திறந்திருக்கும்; உணவு காகிதம். அது என்ன?

**தங்கை** : ‘அஞ்சற் பெட்டி’

**அண்ணா** : ஊரைச் செழிக்க வைத்து; உல்லாச நடை பயின்று; வளைந்து குலுங்கி வையகமெல்லாம் சுற்றி வருவாள் ஒரு வனிதை. அவள் யார்?

**அகிலன்** : எனக்குத் தெரியவில்லை.

**பாட்டி** : அதற்குச் சரியான விடை 'கங்கை'. அது சரி. நான் கூறும் விடுகதைக்கு விடை கூறுங்களேன் பார்ப்போம். எல்லை இல்லா அழகி; எட்டி நிற்கும் இரும்பையும் கவர்ந்து தன்பால் இழுப்பாள். அவள் யார்?

**அண்ணா** : 'காந்தம்' தானே பாட்டி.

**பாட்டி** : (பாட்டி பொக்கை வாயைத் திறந்து சிரித்தபடி) ஆமாம் சரியாகக் கூறினாய்.

**அண்ணா** : ஏற முடியாத இடத்தில் எட்டப் பறக்கும் பனித்துளி. அது என்ன?

**அகிலன்** : 'முகில்' என்பது சரியான விடையா அண்ணா?

**அண்ணா** : சரியான விடைதான் அகிலன்.

**அகிலன்** : ஐந்து அடுக்கு, நாலு இடுக்கு அது என்ன?

**தங்கை** : தெரியவில்லையே.

**அப்பா** : 'விரல்கள்' தானே அகிலன்.

**அகிலன்** : ஆமாம் அப்பா, இப்போது நீங்கள் ஒரு விடுகதை கூறுங்களேன்.

**அப்பா** : ஒளி கொடுக்கும்; விளக்கல்ல, வெப்பம் தரும்; நெருப்பல்ல, பளபளக்கும்; தங்கமல்ல. அது என்ன?

**தங்கை** : 'சூரியன்...' 'சூரியன்...' (என்று பலமாகச் சத்தமிட அனைவரும் சிரித்தனர்)

**அகிலன்** : நான் ஒரு விடுகதை கேட்கலாமா?

**தாத்தா, பாட்டி** : அதற்கென்ன கேள்.

**அகிலன்** : ஓடிப் படர்வேன்;கொடி அல்ல, ஒளி மிக உண்டு; நிலவுமல்ல, மனைகளை அலங்கரிப்பேன்; மலரல்ல. அது என்ன?

**அண்ணா** : 'மின்சாரம்'
(அவ்வேளை மின்சாரம் உயிர் பெற்று மனை பிரகாசமானது)

**அகிலன்** : சரியாகச் சொன்னீர்கள் அண்ணா! இதோ மின்சாரமும் வந்து விட்டது.

**அம்மா** : வாருங்கள், விளையாடியது போதும். நாம் அனைவரும் வீட்டினுள் சென்று இரவு ஆகாரம் உண்ணலாம்.

**அகிலன்** : வருகிறோம் அம்மா, நேரம் கழிந்ததே தெரியவில்லை. இவ்விடுகதை விளையாட்டு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

**அப்பா** : உண்மை தான். நேரம் கிடைக்கும் பொழுது இவ்விளை யாட்டை விளையாடுவோம்.

**மூவரும்** : (முகம் மலர்ந்து) சரி அப்பா!
(எல்லோரும் எழுந்து ஆகாரம் உண்ண வீட்டினுள் சென்றனர்.)

**அகராதிப் பயன்பாடு**




வையகம் -
வனிதை -
கங்கை -
புதையல் -
ஆகாரம் -
மனை -

**பயிற்சி**

## 11.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. விடுகதை விளையாட்டை ஆரம்பித்து வைத்தவர் யார்?
2. இவ் உரையாடலில் இடம்பெற்றவர்கள் யாவர்?
3. பாடத்திலுள்ள இரட்டைக்கிளவிச் சொல்லை எழுதுக.
4. பனித்துளி எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.
5. நீங்கள் அறிந்த விடுகதைகள் ஐந்தை எழுதுக.

## 11.2 கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லிற்கும் பொருத்தமான ஒத்தகருத்துச் சொல்லையும் எதிர்க்கருத்துச் சொல்லையும் எழுதுவோம்.

| | ஒத்தகருத்துச்சொல் | எதிர்க்கருத்துச்சொல் |
|---|---|---|
| i. வெளிச்சம் | - ...................................... | ...................................... |
| ii. தோழன் | - ...................................... | ...................................... |
| iii. கங்குல் | - ...................................... | ...................................... |
| iv. கானகம் | - ...................................... | ...................................... |
| v. கேள்வி | - ...................................... | ...................................... |

### பழமொழிகள்

ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் பயன்பாட்டில் இருந்து வரும் அனுபவக்குறிப்புகள் பழமொழி ஆகும். கருத்தொன்றைப் பிறருக்கு எளிமையாகப் புரியும்படி, நுண்மையாகவும் தெளிவாகவும் இனிமையாகவும் சுருக்கமாவும் கூறப் பழமொழி உதவுகிறது.

**ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவுமா?** என்பது ஒரு பழமொழி. இது சுரைக்காயையோ, கறியையோ உணர்த்தாமல் வேறொரு பொருளை உணர்த்துகின்றது. புத்தகத்தைப் படித்தால் மட்டும் போதாது. செயல் ஊடாகப் பெறும் அனுபவ அறிவே அவசியம் என்னும் பொருளை உணர்த்துகிறது.

உதாரணம்:

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சியாற் பயன் உண்டு.
2. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு - அதிக ஆசை அழிவைத் தரும்.
3. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் - ஓர் உதாரணமே போதும்.

## 11.3 தரப்பட்ட சொல்லுக்குரிய கூட்டத்தைக் குறிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பல் | → | வரிசை / நிரை / தொடர் |
| 2. | திறப்பு | → | கூட்டம் / சபை / கோர்வை |
| 3. | சனம் | → | குழாம் / திரள் / படை |
| 4. | மயில் | → | தோப்பு / குழாம் / கூட்டம் |
| 5. | புகையிலை | → | கட்டு / சிப்பம் / படை |
| 6. | மலை | → | படை / கும்பல் / தொடர் |
| 7. | திராட்சை | → | சீப்பு / குலை / கொத்து |
| 8. | மா | → | கூட்டம் / தோப்பு / தொடர் |
| 9. | மான் | → | கூட்டம் / திரள் / குழு |
| 10. | ஆடு | → | நிரை / மந்தை / படை |

## 11.4 கீழே தரப்பட்டுள்ள பெயர்ச் சொற்களை அவற்றின் வகைக்கேற்ப பொருத்தமான இடத்தில் எழுதுவோம்.

இலை நேற்று உணவு வட்டம்
வீடு வருதல் கறுப்பு
பூ மாலா தை இனிப்பு
மரம் பாடுதல் மூக்கு
இலங்கை சனிக்கிழமை பாடசாலை ஆடுதல்

- பொருட்பெயர் : ........................ ........................ ........................
- இடப் பெயர் : ........................ ........................ ........................
- காலப் பெயர் : ........................ ........................ ........................
- சினைப் பெயர் : ........................ ........................ ........................
- குணப் பெயர் : ........................ ........................ ........................
- தொழிற் பெயர் : ........................ ........................ ........................

## 11.5

### (அ) பின்வரும் பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்வோம்.

தீமை செய்தால் தீமை வரும்.

உடல் வலிமை அவசியம்.

முயற்சி செய்தால் வெற்றி கிட்டும்.

மானத்துடன் வாழ வேண்டும்.

சிறுவயதுப் பழக்கம் நீங்காது

1. கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும். - ..........................................
2. அழுத பிள்ளை பால் குடிக்கும். - ..........................................
3. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். - ..........................................
4. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். - ..........................................
5. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். - ..........................................

### (ஆ) பின்வரும் பழமொழிகளின் பொருள்களை விளக்கி ஒவ்வோர் வாக்கியம் எழுதுவோம்.

உதாரணம்: ***உப்பிட்டவரை உள்ளளவும் நினை*** என்பதற்கேற்பக் கர்ணன் துரியோதனனுக்காகப் போர் புரிந்து உயிர் துறந்தான்.

1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
2. பேராசை பெரு நட்டம்.
3. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
4. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
5. விளையும் பயிரை முளையில் தெரியும்.

## 11.6 எழுத்துக்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களை எழுதுவோம்.

உ -ம் :- மனைரகு மள்கக் கபுழ்ந்து பேனர்சி.
குமரனை மக்கள் புகழ்ந்து பேசினர்.

1. தம்சுத் கசும் ருதம் ..........................................
2. ஒரு அது அயகிழ மராகிம் கும்ஆ ..........................................
3. இறுன் எதும சாடபாலை முறைவிடு நாம்குளா ..........................................
4. துந்பரு யஉர யஉரப் கிக்பறறது. ..........................................
5. நக்கல்லொழும் ஒரின்ருவ வைவாழ் உத்துர்யம் ....................................

## 11.7 தரப்பட்ட ஒலி வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு பாடலின் இடைவெளியை நிரப்புவோம்.




### சொல்லும் பொருளும்

குணமான நீதி விளக்கும் - ______________
கூர் ஏற்றும் இரும்புக் கருவி - ______________
துணிவான போரில் விளங்கும் - ______________
சுவைக்கனியாம் பூக்கள் கொடுக்கும் - ______________

பழகுமீனைப் பிடிக்கும் நெய்த - ______________
பதுங்க வரப்பில் தோண்டும் எலிகள் - ______________
அழகுணர்ச்சித் தொழிலில் மிளிரும் - ______________
அருமைமிகு பயிரைக் கெடுக்கும் - ______________

இலை விரித்துக் காய்க்கும் பச்சை - ______________
இரை பிடிக்க நீந்தும் குளத்தில் - ______________
உலைக்களத்தில் கொல்லர் செய்வார் - ______________
ஓராண்டின் ஆறாம் மாதம் - ______________